சரியான விடை **அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 2016**

1.(b) இந்து கூட்டுக் குடும்பம்
2.(c) சிற்றளவு வியாபாரம்
3.(a) விரைவாக
4.(a) பூரண நல்ல நம்பிக்கை
5.(c) 1932 சட்டம்
6.(a) முதல்வர் மற்றும் முகவர்
7.(c) 7
8.(a)தொழில் கூட்டுருவாக்கச்சான்றிதழ் பெற்றவுடன்
9.(a) 90 நாட்கள
10(c) அழைப்பு பணத்தை செலுத்தத் தவறுவது
11.( a) 15 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
12.(d) மேற்சொன்ன அனைத்துமாக
13.(b)ரூ5000000க்கும் கூடுதலாக இருக்கும் நிறுமம்
14.(c) 6
15.(b) 1956
16.(a) கலைமான்
17.(a) இங்கிலாந்து
18.(d) 25
19.(b) இந்திய நிறுமச் சட்டம் 1956
20.(b) பொதுக் கழகம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. துறைப்படுத்துதல்
22. பன்னாட்டு நிறுமத்திற்கு
23. வரையறுக்கப்படாதது
24. 20
25. நிறுவனம்
26. உழையா/ முதலிடும் கூட்டாளி
27. எழுத்துவடிவிலோ
28. செயல்முறைவிதிகள்
29. 5000
30. 2
31. குறைவெண்
32. 21 நாட்கள்
33. சிறப்புத் தீர்மானம்
34. கடனீட்டு
35. பட்டியலிடுதல்
36. மும்பை
37. இணைந்து பணியாற்றுதல்
38. சிறுதொழில் உற்பத்தியாளர்கள்
39. தனிச்சட்டத்தின் மூலம்
40. பொதுத்துறை

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41. வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச் சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. TWAD TNEB TNHB

**42.ஒருங்கிணைத்தல்:** விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். (எ.கா) இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**43.கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகள் :** தனியாள் வணிகம், இந்துக் கூட்டுக்குடும்பம், கூட்டாண்மை

**44கூட்டாண்மையின் உட்கிடைஆணையுரிமை:** அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனை பாதுகாக்கும் பொருட்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமைக்கு உட்கிடை ஆணையுரிமை என்று பெயர்.அவ்வாறு அக்கூட்டாளி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கூட்டாண்மையை கட்டுப்படுத்தும்.

**45.கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு:** கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெறுவது - **கூட்டுப்பொறுப்பு** ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்தின்மீது வழக்கு தொடுத்து பெறுவது – **தனிப்பொறுப்பு**

**46.அரசு நிறுமம்** : ஒரு நிறுமத்தின் செலுத்தப் பெற்ற பங்கு முதலில் 51 விழுக்காடுக்கு குறையாமல் மத்திய (அ) மாநில அரசு வைத்திருக்குமேயானல் அதனை அரசு நிறுமம் எனலாம்.

**47.நிறுமத்தின் பொது இலச்சினை** நிறுமம் சட்டம் உருவாக்கிய நபர். அதற்கு உயிர், உடலில்லை. எனவே பத்திர ஒப்பந்தத்தில் கையொப்பம் இட முடியாது. இதற்கு ஒரு முத்திரை உண்டு. இதன் சார்பாக கையெழுத்து இடும் அதிகாரம் பெற்றவர் உண்டு.

**48. மாற்று இயக்குநர்** : இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளியூர் சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**49.சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?** சட்டம் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுள்ளோர் வேண்டுகோள் விடுத்தால் (21 நாட்களுக்குள்) இயக்குநரவை, சிறப்புப் பொதுக் கூட்டத்தை கூட்டலாம். நிறும சட்ட அவையால் கூட்டப்படலாம்.

**50. பொது விடுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமங்கள் பொதுவாகப் பயன்படுத்தும் முறை. பொதுமக்களுக்கு நேரடியாக பங்குகளைக் குறிப்பிட்ட தொகைக்கு விற்பனை செய்வதாகும். ஒரு நிறுமம் அறிக்கை அல்லது விளம்பரத்தின் மூலமாக பொதுமக்களைத் தன்னுடைய பங்குகளில் முதலீடு செய்யும்படி அழைப்பு விடுக்கும். அவ்வகையான சுற்றறிக்கை அல்லது அறிக்கை அல்லது விளம்பரம் ‘ தகவலறிக்கை’ எனப்படும் ஒரு சட்ட ஆவணமாகும்.

**51. பரஸ்பர நிதிகள்** : இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் (பரஸ்பர நிதிகள்) ஒழுங்கு படுத்துதல் 1993 விதிகளின்படி, ‘பரஸ்பர நிதி’ என்பது “அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்” என வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.

**52. கூட்டுறவு சிறப்பங்காடி 4 (எ-டு) :** காமதேனு – சென்னை . சிந்தாமணி – திருச்சி . கற்பகம் – வேலூர் பொன்னி - சேலம் பாண்டியன் சிறப்பங்காடி- மதுரை

**53. ஆதரவுப் பங்காதயம் :** ஒரு உறுப்பினர் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்தை எந்த அளவு பயன்படுத்திக் கொள்கிறாரோ அந்த அளவிற்கு அதன் உபரியிலும் பங்கு பெறுவார். இதுவே ஆதரவு பங்காதாயம் (அ) புரவு பங்காதாயம் எனப்படுகிறது. இது உறுப்பினர்கள் கூட்டுறவு அமைப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள தூண்டுகோலாக அமைகிறது

**54.நாட்டுடைமையாக்கம் :** ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் அதாவது தனியாருக்குச் சொந்தமான தொழில் மற்றும் வாணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி அரசுத் தொழில்களாக அவை செயல்படுமாறு செய்யலாம்.

**55.பொதுக் கழகத்தின் மேலாண்மை:** பொதுக்கழகங்கள் இயக்குரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது. தகுதி, திறமை, அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56. இந்து கூட்டுக்குடும்பம்:** இந்தியாவில் இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு தலை சிறந்து விளங்குகிறது. இது இந்தியாவில் மட்டுமே உள்ளது. வியாபாரம்: கைத்தொழில்கள் சிறுதொழிற்ச் சாலைகள் போன்றவை.இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர் 2.குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர் 2.மிட்டக்சார சட;டத்தின் படி : 1.ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள் .2.இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது .3.தாயாபாகா சட;டத;தின; படி 1.சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல.2.கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும்

**57. : கூட்டாண்மையில் இளவர்** கூட்டாளி இளவர் என்பவர் 18 வயது பூர்த்தி அடையாதவர். பாதுகாவலர் நியமிக்கப்பட்டால் 21 வயது வரை இளவராக கருதப்படுகிறார். சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர். எனவே அவர் கூட்டாளியாக முடியாது. ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்.

**உரிமை வயதை அடையும் முன் :**

1) தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை 2) நிறுவனக் கணக்குகளை பாா;வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை 3) தொழிலின் சொத்துகள் இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்கு மட்டும் அவருக்குப் பொறுப்பு ஆகும். அவரின் சொத்துகள் பொறுப்பாகாது.

**உரிமை வயதை அடைந்த பின்:**

1) உரிமை வயது அடைந்தபின்பு தொடா;ந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும். 2) அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார். 3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்.

**58. அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் யாது ?**

**அமைப்பு முறை ஏடு:** நிறுமத்தின் செயல்பாட்டு எல்லைகளை நோக்கங்களை வரையறுத்து காண்பிப்பது. நிறுமத்தின் பெயர் பதிவலுவலகம் உள்ள இடம் அனுமதிக்கப்பட்ட பங்குமுதல் நோக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பது. உரிய பத்திரத்தலைகள் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். முறைப்படி கையொப்பமிட்டிருப்பதுடன் சாட்சிகளின் கையெழுத்தும் உடையதாக இருக்கும். **அ)பெயர்குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். **ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** :நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.இதில் குறிப்பிடாத எச் செயலிலும் நிறுமம் ஈடுபடக்கூடாது. **இ)இடங்குறித்த உட்பிரிவு** :பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும். **ஈ)பொறுப்பு குறித்த உட்பிரிவு** : இப்பிரிவில் தான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பக்குள்ளாக நேரிடும். பொது நிறுமச் சொத்தகள் அதன் கடன்களை அடைக்க போதுமானதாக அல்லாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டுவருவதாக உறுதி உடுத்துக்கொண்ட தொகை குறிப்பிடப்படும். **உ)முதல் குறித்த உட்பிரிவு** :எப்பங்கு முதலுடன் நிறுமம் பதிவு செய்யப்படுகிறது. என்ற விவரமும் முதல் தொகை குறிப்பிடப்பட்ட மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ள விவரமும் கொடுக்கப்படுகின்றன.

**59. பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:** 1. வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும். (முதன் முதலில் வெளியிடும் போது ஒரு நிறுமம் தனது பங்குகளை வட்டத்தில் வெளியிடக் கூடாது.) 2. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும். 3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது. (சில சிறப்பான சூழ்நிலையில் மைய அரசு இதை விட கூடுதல் வட்டம் அல்லது தள்ளுபடி இருக்க அனுமதி வழங்கும்.) 4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும். 5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். 6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**60.ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வேண்டின் நிபந்தனைகள் :** கூட்டத்தை கூட்டும் அதிகாரம் பெற்றவர்களால், கூட்டம் உரிய

முறையில் கூட்டப்பட வேண்டும். அதாவது 1.இயக்குநர் அவை 2.பங்குநர் 3. நிறுமச் சட்ட ஆவை சட்ட விதிகட்குப்பட்டு கூட்டம் அமைய வேண்டும். அதாவது உரிய தலைவர் தலைமையில் நடைபெறுதலும், கூட்டத்திற்குச் சட்டம் வகுத்துள்ள குறைந்தளவு உறுப்பினர்கள் வருகை தருதலும் இன்றியமையாதவை. சட்ட விதிமுறைகளின் படியும், செயல்முறை விதிகளின்படியும் கூட்டம் நடைபெற வேண்டும். முறைபிறழாது, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நடைபெற வேண்டும்.

**61. முதலீட்டார் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?**

இதுபேரளவுசில்லறைவியாபாரஅமைப்புகூட்டுறவு அமைப்பில்தொடங்கப்படுவதுஇதில்விற்கப்படும்பொருட்கள்விலைகளுடன்இணைக்கப்பட்டிருக்கும்.ஒரேவிலைபேரம்பேசஇயலாது.வரைவிலக்கணம ;: சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்புநான்குஅடிப்படைதுறைகளைக்கொண்டது.மளிகைப்பொருள்சுயசேவைப்பிரிவுமாமிசப்பால்பொருள்கள்மற்றும்வீட்டுஉபயோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம்சலுகைஅடிப்படையில்துறைகளைகுத்தகைக்குநடத்தம்இடம்என்றுM.M.ஜிம்மர்மென்வரையறுக்கிறார;.

சிறப்பியல்புகள்

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம்தவிர்க்கப்படும்

சரியானஅளவுஎடைகுறைஎன்றநிலைஏற்படுவது இல்லை.

8.அரிதானபொருட்கள்கூட இங்குவிற்பனைசெய்யப்படும்.

**63.துறைவாரி அமைப்பின் இயல்புகள்:** 1. தேவைப்படும் நிதிமுழுவதையும் அரசே அளிக்கிறது. 2.இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி இயக்கம் குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைகளுக்கும் பதில் சொல்லும் கடமை அந்த அமைச்சகத்திற்கு உண்டு. 3.இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது. 4.இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின் மூலம் ஒதுக்கப்படுகிறது. 5. இதன் வரவு - செலவுத் திட்டம் அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும். 6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது. அரசின் இசைவின்றி இந்நிறுவனங்களுக்கெதிராக வழக்கு தொடுக்க இயலாது

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64. அமைப்பின் கோட்பாடுகளை விவரிக்க.**

**1.நோக்கங்களின்ஒருமை:** அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.

**2.வேலைப்பகிர்வு:** அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். **3. கட்டுப்பாட்டு வீச்செல்லை :** ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். **4. தரவரிசைக் கோட்பாடு :** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். **5. கட்டளையொருமை :** ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **6. பணி வழி வரைவிலக்கணம் :** ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். **7. ஒருமுனை இயக்கம் :** ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். **8. ஒருங்கிணைத்தல் :** விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். **9. அதிகார ஒப்படைவு :** ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ்

பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.10. **பொறுப்பு கோட்பாடு** : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார். அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். 11. **நெகிழ்வுத்தன்மை** : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும். 12. **திறமை** : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். **13.தனித்திறமை** : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். 14. **எளிமை** : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**64.ஆ) அரசு நிறுமத்தின் இயல்புகள்:**

1) கூட்டுருவாக்கம்: அரசு நிறுமமும் 1956 இந்திய நிறும சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது. 2) அரசு நிதி: தேவையான பெரும்பான்மை பங்குமுதல் அல்லது மொத்த பங்கு முதலில் குறைந்தபட்சம் 51% அரசு கொண்டிருக்கும். 3) மேலாண்மை: தக்க வல்லமையும், அனுபவமும் வாய்ந்தவர்களையே அரசு நியமிக்கும். தொழிலாளர், நுகர்வோர், தொழில் நுட்ப வல்லுநர் போன்ற பல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் தரும் வண்ணம் நிறுமத்தின் இயக்குநர்களை அரசு நியமிக்கும். 4) தன்னாட்சி: நிதி மற்றும் நிர்வாகம் குறித்து தக்கவாறு செயல்பட, அரசு நிறுமங்களுக்கு மிகுந்த சுதந்திரம் இருக்கிறது.5) பணியாளர்கள்: அரசால் நியமிக்கப்படும் அரசு அலுவலர்கள் தவிர மற்ற பணியாளர்களை தாமே தேர்ந்தெடுத்து அமர்த்தலாம். 6) கட்டுப்பாடு, தணிக்கை: துறை சார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டது. இதன் தணிக்கையாளரை மைய அரசே நியமிக்கும்.

**நிறைகள் 1. எளிதான அமைப்பு.** அரசு நிறுமத்தை உருவாக்குவதும் இவற்றின் அமைப்பில் அவ்வப்பொழுது தேவையான மாற்றங்களைச் செய்வதும் எளிது. இவற்றைத் தொடங்க பாராளுமன்றத்தின் முன் அனுமதி தேவை இல்லை. **2. நெகிழ்வுத் தன்மை**. இது நிறுமச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பினும் தேவையான அளவு நெகிழ்வுத் திறன் பெற்றிருக்கிறது. மாறுபடும் பொருளாதார , வணிகச் சூழ்நிலைகளுக்கேற்ப இவை தமது அமைப்பு, இயக்கம், நிருவாக முறைகளை மாற்றியமைத்துக் கொள்ளலாம். **3. செயல் சுதந்திரம்**. இதன் நிதி, நிருவாகம், பணியாளரை அமர்த்துதல் போன்றவற்றைச் செய்ய இதற்கு முழு சுதந்திரம் உள்ளது. **4. அரசு தலையீடின்மை.** இதன் செயல்பாட்டில் அரசு தலையிடுவதில்லை. எனவே தனியார் துறையினரைப் போன்று இது தொழில் முறைக் கண்ணோட்டம், செயல் சுதந்திரம், விரைந்து முடிவெடுப்பது, நெகிழ்வுத் திறன் போன்ற சிறப்புகளைப் பெற்றிருக்கிறது. **5. தொழில் கண்ணோட்டத்தில் இயங்கும்.** இவை தனியார் துறை நிறுமங்களைப்போலத் தொழில் நுட்பக் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன. இவை ஈட்டும் இலாபத்தைத் தம் தொழிலின் விரிவாக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. **6. தொழில் நிபுணத்துவம்.** இது தனியார் தொழில்களின் திறமையையும் அரசின் பொதுநலக் கண்ணோட்டத்தையும் ஒருசேரப் பெற்றிருக்கிறது. நமது அரசு அயல்நாட்டினரோடு கூட்டாகத் தொழில் செய்து, தொழில் நுட்பத் திறமையையும், நிதி வளங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற அமைப்பாக விளங்குகிறது. **7. ஆரோக்கியமான போட்டி.** தனியார் துறையினரைப் போன்று தொழில் முறைக் கண்ணோட்டம், செயல் சுதந்திரம், விரைந்து முடிவு ஏடுப்பது, நெகிழ்வுத்திறன் போன்றவற்றோடு ஆரசின் ஊதவியும் ஈருப்பதால் ஆரசு நிறுமங்கள் தனியார் நிறுமங்களுக்கு இரோக்கியமான போட்டியை ஊருவாக்க முடியும். **8. புறக்கணிக்கப்படும் துறைகளை வளர்ச்சியடையச் செய்தல்.**ஆபத்து நிறைந்திருக்கும் தொழில், ஈலாப வாய்ப்பு குறைவாக உள்ள தொழில் இகியவற்றைத் தனியார் துறை இயல்பாக புறக்கணிக்கும். இனால் அத்தொழில்கள் நாட்டுக்கு மிகவும் தேவையானதாகும். அவ்வாறு தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை நடத்த ஆரசு நிறுமம் ஏற்படுத்தப்படுகிறது. **9. திறமை.** இந்நிறுமங்களின் ஈயக்கம், வளர்ச்சி பற்றிய விசயங்கள் பொதுமக்களின் பாராளுமன்ற இய்வுக்கு ஊட்பட்டிருப்பதால், ஈந்நிறுவனங்கள் திறம்படவும் விழிப்போடும் நிருவகிக்கப்படுகின்றன. **குறைகள் 1. அரசியல் தலையீடு.** அரசு நிறுமம் பெற்றிருப்பதாகச் சொல்லப்படும் செயல் சுதந்திரம் ஊண்மையிலேயே இவற்றிற்கிருப்பதில்லை. ஈதன் ஈயக்குநர்களில் பெரும்பாலானோர் ஆரசால் நியமிக்கப்படுவதால் ஆரசு ஏன்ன ஏண்ணுகிறதோ ஆதை செயல்படுத்திக் கொள்ள ஆதிக வாய்ப்பு ஈருக்கிறது. **2. சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படுதல்.** இந்நிறுமங்களுக்குத் தேவையான முதல் முழுவதையுமோ, ஆதன் பெரும்பகுதியையோ ஆரசு தருவதால், ஆதாவது பெரும்பான்மை பங்குதாரராக ஈருப்பதால் ஆரசு தன் ஏண்ணங்களை ஈவற்றின் நிருவாகத்தின் மீது திணிக்க வாய்ப்பிருக்கிறது. **3. ஈடுபாடின்மை.** இதன் உயர் பதவிகளில் அமர்த்தப்படும் அரசு அலுவலர்கள் வேறு பதவிகளுக்கு அடிக்கடி மாற்றப்படலாம். அவர்கள் இதில் பங்குமுதல் இடுவதில்லை. ஏனவே, அவர்கள் திறம்படவும், உடுபாட்டுடனும் உழைப்பார்கள் ஏன்று ஊறுதியாகக் கூற ஈயலாது. **4. பதிலளிக்கும் பொறுப்பு.** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஈதன் இண்டு ஆறிக்கை ஆதன் நிதி குறித்த செய்திகளையே தாங்கியிருக்கும். ஈந்நிறுமத்தின்

செயல்பாட்டுத்திறன், மேலாண்மை போன்ற முக்கியமான செய்திகள் குறித்து ஆந்த ஆறிக்கை ஆதிகமாகக் கூறுவதில்லை. **5. தாமதம் மற்றும் முனைப்பற்ற போக்கு.** ஆரசு வகுத்துத் தரும் கொள்கைகளை செயற்படுத்த வேண்டியதாகவே ஆரசு நிறுமங்கள் ஈருக்கின்றன. ஆரசுச் செயல்களுக்கே ஊண்டான தாமதம், முனைப்பற்ற போக்கும் ஈவை திறம்பட செயல்படுவதைத் தடை செய்கின்றன.

**65.அ) தனிவணிகத்தின் நன்மைகள் ஏதேனும்10 : 1.நன்மைகள் : 1.எளிதான அமைப்பு :** தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை.

**2.நேரடி ஊக்குவிப்பு :** 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியார் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**3.நெகிழ்ச்சி தன்மை :** தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.

**4.வியாபார ரகசியங்களை காத்தல் :** வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு :** தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளர் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம்

**6.அதிக வெகுமதி :** தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலர் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு :** குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**9.ஆளுமை வளர்ச்சி :** தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.

**10.எளிமையாக கலைப்பு :** .கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**65.ஆ) ஏதேனும் எட்டு கூட்டு கூட்டுறவு சங்கங்கள்: நாணய சங்கங்கள்** இது எளிய மக்களால் தன்னிச்சையாக இணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இது உறுப்பினர்களுக்கு குறுகிய கால நிதியுதவி அளிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இந்த வழிகளில் உறுப்பினர்களை கடும் வட்டிக்குப் பணம்தரும் கடனீந்தோரிடமிருந்து ஊறுப்பினர்களைக் காக்கிறது. இந்த சங்கங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை, அ. வேளாண்மை கடன் சங்கங்கள் ஒரு கிராமத்திலுள்ள விவசாயிகளால் பொதுவாக அமைக்கப்படும் கடன் சங்கமாகும். விவசாயம் சார்ந்த ஊற்பத்தி மற்றும் உற்பத்தி சாரா நோக்கங்களுக்காக உறுப்பினர்களுக்குக் கடன் வசதியளிக்கிறது. இச்சங்கங்கள் ஊரக நாணயச் சங்கங்கள் (ஆ) பிரதம நாணயச் சங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஊரக நாணயச் சங்கங்கள் இது கிராமங்களில் தோற்றுவிக்கப்படும். இதற்குரிய பங்கு முதல் பங்குகள் வெளியிடுவதன் மூலமாகவும், உறுப்பினர் மற்றும் உறுப்பினரல்லாதவரின் வைப்பும் பெற்றும் திரட்டப்படுகிறது. சிறு விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் உற்பத்தி சார்ந்த காரணங்களுக்காக கடன் வசதி அளிக்கின்றன. இந்த பிரதமச் சங்கங்கள் கிராம அளவில் அதிகமாக நடத்தப்படுகிறது. இவை உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும், ஊரகச் சேமிப்புகளை திரட்டிக் கொடுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருகின்றன. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும். இ. வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள் வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களால் அமைக்கப்படுகிறது. இதன் நோக்கம் உறுப்பினர்களுக்கு உற்பத்திச் சார்ந்த நோக்கங்களுக்கு உதவி புரிவதாகும். அவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். **1. நகர வங்கி** இது நகர்ப்புறங்களில் அமைந்திருக்கும். அதனால் ஈந்த அமைப்புக்கு நகரக் கடன் சங்கங்கள் ஏன்று பெயர். இதன் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது ஆகும். அது உறுப்பினர்களிடமிருந்தும் வைப்புத் தொகை திரட்டுகிறது. இந்த நிதியின் மூலம் உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் கடனுதவி அளிக்கிறது. இது வணிக வங்கியைப் போன்றே வங்கித் தொழிலையும் செய்கிறது. **2. பணியாளர் கடன் சங்கங்கள்** இது குறைந்த வளங்களுடைய மக்களால் அமைக்கப்படுவது. இதன் முக்கிய நோக்கம் உறுப்பினர்களுக்கு நிதி உதவியளிப்பதாகும். இது உறுப்பினர்களிடையே சிக்கனம், மற்றும் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கிறது. தொழிலமைப்பிலுள்ள பணியாளர்களால் இந்த சங்கம் உருவாக்கப்பட்டு நீண்ட கால கடன் வசதி குறைந்த வட்டியில் வழங்குகின்றனர். **3.தொழிலாளர் கடன் சங்கங்கள்** ஒரு தொழிற்சாலையிலுள்ள திறமையான, நடுத்தரமான திறமையுள்ள தொழிலாளர்களால் இவ்வமைப்பு உருவாக்கப்படுகிறது. இது உறுப்பினர்களுக்கு குறைந்த கால கடன் வசதி, ஏலம் விடுதல் மூலம் நிதி உதவியும் அளிக்கிறது. கடன் தொகைகள் சமமாக்கப்பட்ட மாதாந்திர தவணை மூலம் வட்டியுடன் வசூலிக்கப்படுகிறது. **ஈ. நாணயம் சாரா சங்கங்கள்** இந்த சங்கங்கள் பொருளாதார பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வாகும். இது பொருளாதார பிரச்சனையுள்ள மக்களால் அமைக்கப்படுவது. இது பின்வரும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். 1. வேளாண்மை சாரா கடன் சங்கங்கள் 2. வேளாண்மைச் சாரா கடன் சாராத சங்கங்கள் **1. வேளாண்மைச் சாரா கடன் சங்கங்கள்** இந்த சங்கங்கள் உறுப்பினர்களின்

குறைந்த வளத்தை வைத்துக்கொண்டு குறைந்த வட்டியில் கடன்பெறச் செய்கிறது. இது உறுப்பினர்களின் பொருட்களுக்கு சந்தையிடவும், பண்ணை செய்யவும், தொழில் சேவைகளையும் செய்கின்றது. பின் வருபவை இதன் வகைகளாகும். **ஆ. கூட்டுறவு சந்தையிடுதல் சங்கம்** கூட்டுறவு சந்தையிடுதல் சங்கம் உறுப்பினர்கள் ஊற்பத்தி செய்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உதவி புரிகிறது. இச்சங்கங்கள் உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பொருட்களை வாங்கி, சந்தையில் நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்கின்றன. சில வேளைகளில் உறுப்பினர்களின் உற்பத்திப்பொருட்களை கழிவு அடிப்படையில் விற்பனை செய்து தருகிறது. இந்த சங்கம் உறுப்பினர்களுக்கு முன்பண வசதியும், கடனும் அளிக்கிறது. இடைத் தரகர்களை நீக்கி உறுப்பினர்களின் உற்பத்திப்பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்கிறது.

**இ. கூட்டுறவு பண்ணை சேவை சங்கம்** இது நில உரிமையாளர்களாலும், விவசாயிகளாலும் நடத்தப்படும் சங்கமாகும். அதிக அளவில் பண்ணை சேவை செய்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக பொருட்களை உற்பத்தி செய்யும் பயன்களைப் பெறுகிறது. விவசாய விளைச்சல் குறைந்தபோதும் உறுப்பினர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கிறது. **ஈ. தொழிற்சாலை கூட்டுறவு சங்கம்** இந்த சங்கங்கள் சிறு தொழில் செய்யும் ஊற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது. கூட்டுறவு முறையில் சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைக்க இந்த சங்கம் மிகுந்த உதவி புரிகின்றது. உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் மூலப்பொருட்களைப் பெற இந்த சங்கங்கள் மிகுந்த உதவிபுரிகின்றன. **2. வேளாண்மை சாரா கடன் சாரா சங்கங்கள்** இந்தச் சங்கங்கள் நடுத்தர மற்றும் பின்தங்கிய வருவாய் உள்ள மக்களுக்கு உதவி புரிய தொடங்கப்பட்டதாகும். இதன் முதன்மை நோக்கம் பலவகையான சேவைகள் உறுப்பினர்களுக்கு குறைந்த செலவில் செய்து தருவதாகும். அதன் பல்வேறு வகைகளாவன. **1. நுகர்வோர் கூட்டுறவு 2. உற்பத்தியாளர் கூட்டுறவு 3. கூட்டுறவு வீட்டு வசதி 4. கூட்டுறவு பண்டகசாலை 1. நுகர்வோர் கூட்டுறவு** இந்த சங்கம் ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள நுகர்வோர்களால் இன்றியமையாத பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க நடத்தப்படுவதாகும். இதற்கு நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை என்று பெயர். இது இடைநிலையர்களைத் தவிர்க்கிறது. இந்த சங்கம் தேவையான பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்தும் மொத்த வியாபாரிகளிடமிருந்தும் அதிக அளவில் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதவர்களுக்கும் நியாயமான விலையில் விற்பனை செய்கிறது. **2. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்** ஓரே நகரத்திலுள்ள உற்பத்தியாளர்களால் ஓரேவகையான தொழிற்சாலையை நடத்துபவர்களால் அமைக்கப்படுவது இகும். இது உறுப்பினர்களுக்குத் தேவையான இன்றியமையாத மூலப்பொருட்களையும், அரசின் உதவியையும் வரிச்சலுகைகளையும், பணியாட்களையும் பெற்றுத்தர உதவிபுரிகிறது. செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், துணிவகைகள் மில் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை ஏடுத்துக்காட்டுகளாகும். **3. கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்** ஒவ்வொரு நபருக்கும் சொந்த வீடு தேவை என்பது இருக்கும். சொந்த வீடு கட்டும் விருப்பமும், அதற்குத் தேவையான போதுமான நிதி வசதியில்லாதவர்களால் இந்த கூட்டுறவு வீட்டு வசதி கடன் சங்கம் தொடங்கப்படுகிறது. இது உறுப்பினர்கள் வீடு கட்ட, குறைந்த வட்டிக்கு நிதி உதவி அளிக்கிறது. கடன் தொகைகளை வட்டியுடன் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறுகிறது. **4. கூட்டுறவு பண்டகசாலை** இது அதிகமாக கிராமப்புறங்களில் காணப்படும். விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. மேலும் முற்றுப்பெற்ற பொருட்கள் சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

**66)அ) கூட்டாளிகளின் உரிமைகள்** 1. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் மேலாண்மையில் பங்கேற்கவும் உரிமை உண்டு. 2. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தம் கருத்தை தெரிவிக்க உரிமை உண்டு. 3. முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் எனக் கோருவதற்கு உரிமை உண்டு 4. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.

5. ஒவ்வொரு கூட்டாளிக்கும் இலாபத்தில் சமபங்கேற்க உரிமை உண்டு. 6. தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது 6% வட்டி பெற உரிமைஉண்டு. 7. அன்றாட வியாபாரத்தில் தாம் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு 8. தொழிலுக்காக நிறுவன சொத்துக்களை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 9. ஒப்புதல் இன்றி புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 10. நிறுவனத்திலிருந்து ஒய்வு பெற உரிமை உண்டு.

**கூட்டாளியின் கடமைகள்** அனைத்து கூட்டாண்மைக்கும் பொருந்தும், உடன்பாட்டால் மாற்றமுடியாத சட்டத்தால் நிரந்தரமாக கொடுக்கப்பட்ட கடமைகளே முழுமையான கடமைகள் : 1) ஒவ்வொரு கூட்டாளியும் தன் கடமைகளை கவனக்குறைவின்றியும், நாணயமாகவும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காகவும் நிறைவேற்ற வேண்டும். 2)ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளிடம் விசுவாசமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். 3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயல்பட வேண்டும். 4) வேறு வகையில் உடன்பாடு இல்லாத போது நிறுவன நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர். 5) தொழில் நடவடிக்கையில் தான் அறிந்து செய்த தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிறுவனத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும். 6) பிற கூட்டாளிகளின் இசைவின்றி தன் பங்கை பிறருக்கு மாற்றக் கூடாது. 7) நிறுவன தொழில் சார்ந்த கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்க வேண்டும். 8) கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக கூட்டாளி நடத்தக்கூடாது. 9) நிறுவன சொத்துக்களை நிறுவன நலனுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். 10) எக்கூட்டாளியும் இரகசிய லாபங்களை ஈட்டக்கூடாது.

**66ஆ)செபியின் இயல்பு மற்றும் பணிகள்:**

**இயல்பு:**1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.

2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.

3.(அ)சபைத்தலைவர்கள்

(ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள்

(இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்

(ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல்

**அதிகாரங்கள் :** மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள் அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம்

1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.

3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

**பணிகள் :**

1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.

2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஒப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்

3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.

4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்

5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்

6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிாச்சியளித்தல்

7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்

8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்

9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்

10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியினை செய்தல்

**67அ) நிறுமத்திற்கும் கூட்டாண்மைக்கும் உள்ளவேறுபாடுகள்:**

| எண் | பொருள் | கூட்டாண்மை | கூட்டுப்பங்கு நிறுமம் |
|---|---|---|---|
| 1) | சட்டம் | 1932 | 1956 |
| 2) | பதிவுசெய்தல் | கட்டாயமன்று. | கட்டாயமாக்கப்பாட்டுள்ளது |
| 3) | பங்கு மாற்றம் | மாற்றித்தரஇயலாது. | மாற்றக் கூடியவை. |
| 4) | மேலாண்மை | அனைத்துகூட்டாளிகள் | இயக்குனர் அவை |
| 5 | நீடித்தவாழ்வு | நிலையற்றது | நிலையானது |
| 6 | பொறுப்பு | கூட்டு மற்றும் தனி | வரையறு |
| 7 | தணிக்கை | விருப்பம் | சட்டப்படி |
| 8 | எண்ணிக்கை | குறைந்தது 2<br>அதிகம் வங்கி 10<br>பிறதொழில் 20 | தனி 2 பொது 7<br>தனி 50 பொது<br>வரையறையில்லை |
| 9 | உறுப்பினராதல் | தனிநபர் மட்டுமே | நிறுமமே ஒரு<br>நிறுமத்தை வாங்கலாம் |
| 10 | கலைப்பு | எளிது | சட்டப்படி |

**67ஆ)நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தணுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.